# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, சென்னை –600 032.
தொலைபேசி: 044–22201337/நிகரி எண்.22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
*************

அசல் மனு எண் : 1352/2016/ந

ஆணை எண் : 0002/2017

நாள் : 02/01/2017

திரு. அ.செ. மோகன்,
எண்.8, முதல் தெரு,
தி.சு. லட்சுமணன் நகர்,
குரோம்பேட்டை, சென்னை – 600 044. - முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
பல்லவபுரம் நகராட்சி,
மற்றும் இருவர். - எதிர் மனுதாரர்

## ஆணை:

மனுதாரரது 24.12.2016 நாளிட்ட மனு 26.12.2016 அன்று வரப்பெற்று எண்.1352/16 ஆக இம்முறை மன்ற நடுவத்தில் பதிவு செய்யப்பட்டது.

மேற்படி மனுவில், மனுதாரரது முந்தைய முறையீட்டு மனு (1009/16) மீதான 11.11.2016 விசாரணைக்கான 17.10.2016 நாளிட்ட அழைப்பாணை தனக்கு கிடைக்கப்பெறவில்லை எனத் தெரிவித்து தனது முறையீட்டு மனுவை மேல் விசாரணைக்கு எடுத்து உரிய உத்தரவுகள் பிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

மனுதாரரது முறையீட்டில் குறிப்பிட்டுள்ள அதே முகவரிக்கு அழைப்பாணை 19.10.2016 அன்றும் இறுதி ஆணை 0177/16 (நாள்:03.12.2016) 21.12.2016 அன்றும் அனுப்பி

வைக்கப்பட்டுள்ளன. மேற்குறிப்பிட்ட இறுதி ஆணை மனுதாரருக்கு கிடைக்கப்பெற்றுள்ள நிலையில், அதற்கு முன்னர் அனுப்பப்பட்ட அழைப்பாணை மட்டும் கிடைக்கப்பெறவில்லை எனக் கூறியுள்ளது வியப்புக்குரியதாக உள்ளது.

மேற்படி ஆணையில் தனது தரப்பிலான ஆதாரங்களை மனுதாரர் சமர்ப்பிக்கத் தவறியுள்ளதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அவ்வாறிருப்பினும், எவ்வித ஆதாரமும் மனுதாரரால் தற்போதும் அனுப்பப்படவில்லை. எனவே, விதிகளின்படி உரிய முறையில் ஆதாரங்களுடன், சாட்சிகள் எவருமிருப்பின் அவ்விவரத்தினையும் குறிப்பிட்டு மீள மனு செய்யும் பட்சத்தில் கூடுதல் வாய்ப்பு இம்முறை மன்ற நடுவத்தால் வழங்கப்படுமென்றும், ஆதாரமற்ற புகார் என உறுதி செய்யப்படும் நேர்வில், எதிர்மனுதாரர்களுக்கு ஏற்படும் செலவுத் தொகைக்கு மனுதாரரை பொறுப்பாக்கி உத்தரவிடப்படுமெனவும் தெரிவித்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2017-ஆம் ஆண்டு ஜனவரி, திங்கள் 2-ஆம் நாள் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.
5/1/2017

பெறுநர்
1. திரு. அ.செ. மோகன்,
   எண்.8, முதல் தெரு,
   தி.க. லட்சுமணன் நகர்,
   குரோம்பேட்டை, சென்னை – 600 044.

2. நகராட்சி ஆணையர்,
   பல்லவபுரம் நகராட்சி,
   குரோம்பேட்டை, சென்னை – 600 044.

5.1.17

5/1/17